**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 13-05-2022**

**வெள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-05-13 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-05-14 | 2022-05-15 | 2022-05-16 | 2022-05-17 | 2022-05-18 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ) | 10.0 | 15.0 | 7.0 | 2.0 | 8.0 |
| டிமாக்ஸ் (° C) | 33.0 | 34.0 | 35.0 | 37.0 | 37.0 |
| டிமின் (° C) | 24.0 | 24.0 | 25.0 | 25.0 | 24.0 |
| RH I (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| RH II (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிமீ) | 10.0 | 10.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 250 | 290 | 250 | 250 | 270 |
| மேகக்கணி (ஆக்டா) | 7 | 7 | 7 | 6 | 6 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மே 14,15,16,17,18 தேதிகளில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33-37 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24-25 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 10 கி.மீ வரை தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் 18.05.2022 முதல் 24.05.2022 வரை இயல்பை விட அதிக மழை மற்றும் வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. பெறப்படும் கோடைமழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்தவும். அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும்.

## எஸ்எம்எஸ் ஆலோசனை:

வரும் நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை

| |
|---|
| எதிர்பார்க்கப்படுவதால் உரமிடுதல் , மருந்து தெளித்தல் மற்றும் களையெடுத்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தவிர்க்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| அரிசி | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக நெற்பயிரில் கதிர் நாவாய்ப்பூச்சியின் தாக்கம் காணப்படுகிறது.இதன் அறிகுறியாக பால் பருவத்திலிருக்கும் நெல் மணிகளிலிருந்து சாறு உறிஞ்சப்படும்.நெல்மணிகள் விதையற்று பதராக மாறி நிமிர்ந்த பூங்கொத்துக்களைக் கொண்டிருக்கும். இதனை கட்டுப்படுத்த தயோமீத்தாக்சம்@1 கிராம்/ லிட்டர் மற்றும் நொச்சி இலைச் சாறு 10%என்ற அளவில் தெளிக்கவும். அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். |
| நிலக்கடலை | அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோமீட்டருக்கும் அதிகமாக வீசக்கூடும் என்பதால் 5 மாதமுள்ள வாழை மரங்கள் சாயாமல் இருக்க மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தேங்காய் | தென்னையில் சுருள் வெள்ளை ஈக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் @ 10 மி.லி அல்லது அசாடிராக்ட்டின் 1% @5 மி.லி /லிட்டர் தெளிக்கவும் அல்லது மஞ்சள் நிற ஒட்டும் பொறிகள் (நீளம் 5 அடி x அகலம் 1.5 அடி ) ஏக்கருக்கு 10 வீதம் 6 அடி உயரத்தில் வைக்கவும். குறிப்பாக கோடைக்காலங்களில் 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல் நோக்கியவாறு 100 தென்னை மட்டைகளை அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகளை அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவு பரப்பி மண் நீர் வளத்தைப் பாதுகாக்கலாம். |
| மிளகாய் | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக மிளகாய் செடியில் இலைப்பேன் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதன் அறிகுறியாக பூச்சி தாக்கப்பட்ட இலைகளில் சுருக்கங்கள் ஏற்பட்டு இலைகள் மேல்நோக்கி சுருண்டு காணப்படும். எனவே இதனை கட்டுப்படுத்த பைப்ரினில் 1.5 மி.லி/ லிட்டர் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கறவை பசுக்களை நிழலில் கட்டி வைத்து தூய்மையான குடிநீர் அனைத்து நேரங்களிலும் தரவும். காலை மாலை நேரத்தில் பசுக்களை குளிக்க வைக்கவும். கடும் வெயில் நேரத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டாம் .வெயிலின் தாக்கம் மிகும் போது வேகமாக மூச்சு வாங்கும் வாயில் நுரை தள்ளும் எலெக்ட்ரால் பொடியை ஒரு லிட்டருக்கு ஒரு கிராம் வீதம் 20 லிட்டர் நீரை குடிக்க கொடுக்கவும்.கோமாரி நோய் தடுப்பூசி போடவேண்டும். |
| வெள்ளாடு | மிகுந்த கோடை வெப்பமுள்ள நேரத்தில் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டாம் . ஆடுகளை மத்திய நேரத்தில் நிழல் மற்றும் காற்றோட்டமான இடத்தில் கட்டி வைத்து தூய்மையான குடிநீரை தரவும். கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடவும்.எலக்ட்ரோ பெஸ்ட் என்ற நீரேற்றும் பொடியை 5 கிராம் 5 லிட்டர் நீரில் கலந்து ஒவ்வொரு ஆட்டிற்கும் தரவும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | தூய்மையான குளிர்ந்த குடிநீரை அனைத்து நேரங்களிலும் தரவும்.லசோட்டா தடுப்பூசியை கண்ணில் சொட்டுமருந்தாக சிறிய குஞ்சுகளுக்கு போடவும். ஆர் டி வி கே என்ற ராணிக்கெட் தடுப்பூசியை பெரிய கோழிகளுக்கு போடவும். தயிர், மோர், பசும் கீரைகள், பசும் புல் போன்றவற்றை மதிய நேரத்தில் தரவும். கோழிகளுக்கு நல்ல காற்றோட்டமான கொட்டகையில் அதிக இடவசதி கொடுக்கவும். பால்சி அல்லது எலக்ட்ரோ பெஸ்ட் என்ற நீரேற்று பொடியை ஒரு லிட்டர் குடிநீருக்கு ஒரு கிராம் வீதம் கலந்து பகலில் தரவும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நில தயாரிப்பு | மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும் நீர்ப்பாசன அளவை குறைக்கவும் களைகளின் வளர்ச்சியை குறைக்கவும் மற்றும் ஆவியாதலைத் தடுக்கவும் மானாவாரி பகுதிகளில் மூடாக்கு முறை பின்பற்றவும். குறுகியகால காய்கறி பயிர்களுக்கு மிக மெல்லிய படல மூடாக்கை பின்பற்றவும். தாவரக்கழிவை பயன்படுத்தி மண் ஆவியாதலை தடுக்கலாம். தென்னை நார் கழிவுகள் அதன் எடையில் ஐந்து மடங்கு தண்ணீரை தேக்கி வைக்கும். |